2010 மே 14]

(எ) குடும்ப அட்டைக்கு மனுச் செய்தவர்களுக்கு விசாரணை முடித்து உடனே வழங்க ஏற்பாடு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் குடும்ப அட்டை இல்லாதவர்கள், குடும்ப அட்டைக்கு மனுச் செய்து, அது விசாரணையிலிருந்து, பல மாதங்களாகியும் இன்னும் குடும்ப அட்டை வராமல் இருந்துகொண்டிருக்கிறது. சொல்லப் போனால், என்னுடைய வேலூர் மாவட்டத்தில், வேலூர் வட்ட வழங்கல் அலுவலர் பகுதியிலேயே மனுச் செய்து 9 மாதங்களாகியும்கூட இன்னும் அந்தக் குடும்ப அட்டை கிடைக்காத சூழல் இருக்கிறது. காரணம், குடும்ப அட்டை இல்லையென்று அந்த* T.S.O.*விடம் ஒரு சான்று வாங்கிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த* T.S.O.*விடம்தான் நாம் மனுவே செய்கிறோம். அந்த அதிகாரியிடமே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விளக்கமெல்லாம் சொல்ல வேண்டாம். கவனத்தை மட்டும் ஈர்த்துவிட்டு உட்காருங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *நிபந்தனைகளையெல்லாம் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தளர்த்தி, இன்னும் சொல்லப் போனால், ஒரு தாசில்தாருடைய ரேஷன் அட்டையையே, ஆளில்லை என்று சொல்லி* cancel *செய்திருக்கிறார்கள். ஆகவே, அதையே இன்னும்* restore *செய்ய முடியவில்லை. ஆக, இப்படிப் பல இடர்ப்பாடுகள் இந்தக் குடும்ப அட்டையை* cancel *செய்து மீண்டும் புதுப்பிப்பதில் அல்லது புதிய அட்டையை வழங்குவதில் இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு வார காலத்திற்குள் விசாரணையை முடித்துக்கொண்டு, குடும்ப அட்டையை வழங்குவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி அட்டைகளைக் களைவதற்காக 9 மாத காலம்*

4 கட்டமாக நாங்கள் எடுத்துக்கொண்டோம். எனவே, அதே அலுவலரை வைத்துத்தான் இந்தப் பணியையும் செய்யவேண்டிய சூழல் அரசுக்கு இருக்கிறது. ஆனாலும்கூட நாங்கள் நிறுத்தவில்லை. புதிய அட்டைகளையும் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். வேலூர் சம்பந்தமான பிரச்சினை ஏற்கெனவே என்னிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்ட, வட்ட வழங்கல் அலுவலகங்களிலே நான் சொல்லியிருக்கிறேன். இந்த மாதத்திலேயே கூடுமான வரையில் வேலூர் மாவட்டத்திலிருக்கின்ற அனைத்து அட்டைகளையும் வழங்குவதற்கு வேண்டிய முயற்சியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே, நீக்கல் சான்று என்பது கட்டாயம் தரவேண்டும். ஏனென்று சொன்னால், ஏற்கெனவே ஒரு குடும்ப அட்டையிலே அந்தக் குடும்பத்தில் இருப்பவர்களெல்லாம் இருக்கிறார்கள். பிறகு ஒரு சிலர் திருமணம் செய்துகொண்டு வேறு குடும்பம் என்று ஆகின்றபொழுது, அட்டையிலே ஏற்கெனவே இருக்கும் பெயர்களை நீக்கி, நீக்கச் சான்றிதழ் கொடுத்தால்தான் புதிய அட்டைகளை வழங்க முடியும். ஆனால், அதே T.S.O., ஒரே அலுவலகமாக இருந்தாலும்கூட அந்தச் சான்றிதழை இணைத்தால்தான் புதிய அட்டை வழங்க முடியும். இப்படியெல்லாம் வழங்காத காரணத்தினால்தான் ஏற்கெனவே பல முறைகளில் பல இலட்சங்களாக போலி அட்டைகள் வந்தன. மீண்டும் duplicate ஆயிற்று. அதனால் அந்தச் சான்றைக் கட்டாயம் வைக்க வேண்டும். வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த மாதத்திலேயே முழு அட்டைகளையும் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

(ஏ) திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், காவல்கிணறு விண்வெளி ஆராய்ச்சி நிலையம், நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையைப் போன்று திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் அணு மின் நிலையமும், அதேபோன்று காவல்கிணறு சந்திப்பிலே இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமும் அமைந்துள்ளது. கூடங்குளத்திற்கு 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் ரூ.500/- முதல் ரூ.1,000/- வீதமும், அதேபோன்று,